**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 368/2018**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 14.082025 | தகப்பனார்/கணவர் பெயர்: | குட்டியாண்டி |
| பெயர்: | கலியபெருமாள் (PW2- Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சந்தப்படுகை | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 80/2025 |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 14.08.2025**

1. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு சம்மன் வந்ததா என்றால் இல்லை. யார், யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் செல்வம் என்பவர் செல்வநாயகி மற்றும் பழனிவேல் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வசம் பரிகாரம் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை தடை உத்தரவு கேட்டு வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து என்பது நரசிங்கராவ் என்பவருக்கு சொந்தமான சொத்தா என்றால் இல்லை ராகவேந்திரராவ்க்கு சொந்தமானது.

2. ராகவேந்திராராவ் இறந்து சுமார் 40 வருடங்களுக்கு மேல் இருக்குமா என்றால் இருக்கும். வாதியின் தகப்பனார் குத்தகை சாகுப்படி செய்வது குறித்து ஆவணங்கள் ஏதேனும் நான் பார்த்தேனா என்றால் இல்லை. எந்த தேதியில் குத்ததைக ஒப்பந்தம் ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாதியின் தகப்பனார் இறந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் சுமார் 10 வருடங்களுக்கு மேல் இருக்கும். வாதிக்கும் ராகவேந்திராவ்க்கும் எப்போது குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் குத்தகை ஒப்பந்தம் ஏற்படவில்லை. ராகவேந்திராவ்க்கும் வாதிக்கும் எவ்வித குத்தகை ஒப்பந்தமும்

ஏற்படவில்லை என்றால் சரியல்ல. குத்தகை தொகையை யாருக்கு யார் செலுத்தினார்கள் என்றால் ராகவேந்திராவிடம் வாதியின் தகப்பனார் மற்றும் வாதி ஆகியோர் குத்தகை செலுத்தியுள்ளனர்.

3. தாவா சொத்தை வாதியோ அவரது தகப்பனாரோ எந்த காலத்திலும், சாகுபடி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் 2 போர்வெல் இருக்கிறது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து நரசிங்கராவ்க்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். அவரது மறைவுக்கு பிறகு அவரது வாரிசு தாரர்களின் அனுமதியின் பேரில் பிரதிவாதிகள் கடந்த ஜீலை 2000 வருடத்திலிருந்து சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2019–ம் ஆண்டு பிரதிவாதிகள் தாவா சொத்தை நரசிங்கராவ் வாரிசுதாரர் கங்காபாயிடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு கங்காபாய் தாவா சொத்தை பரமசிவம் என்பவரிடம் விற்பனை செய்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

4. தாவா சொத்து பரமசிவத்தின் அனுபவத்திலும் உரிமையிலும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் 232/10. தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் சரவணன் நிலத்திற்கு மேற்கு, பாய் நிலத்திற்கு வடக்கு , ராஜா நிலத்திற்கு கிழக்கு, மனோகரன், செல்வராஜ் நிலத்திற்கு தெற்கு இதற்குட்பட்டது. தாவா சொத்தை வாதி மற்றும் வாதியின் தகப்பனார் எந்த காலத்திலும் அனுபவவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.